# சின்னமடுவில் 10 படை பலி; ஆயுதங்கள் மீட்பு

ஊர்காவற்றுறை - சின்னமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சுமார் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இம்மோதல் நேற்று மாலை 6-30 மணியளவில் இடம் பெற்றது. இம்மோதலின் போது சிறிலங்கா இராணுவத்தினரிடம் இருந்து பல ஆயுதங்களும் கைபபற்றப்பட்டதாகத் தெரிய வருகின்றது. இச்சண்டையின் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீர மரணம் அடைந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா; 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 30 (13 . 05 . 1991) திங்கட்கிழமை ஓசை: 84

## மடு அகதிமுகாமிலிருந்து மக்கள் வெளியேற்றம்

(வவுனியா)

மடு திருப்பதி அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த மூப்பது ஆயிரம் தமிழ் அகதிமக்களில் ஐயாயிரம்பேர் மீள தமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியமர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதங்களில் வவுனியா மன்னார் மாவட்டங்களில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் பல்லாயிரக்கணக்கான (4ஆம் பக்கம் பார்க்க)

சிறிலங்கா உள்ளூராட்சித்

# தேர்தலில் முறைகேடு; ஐ.தே.க.மீது குற்றச்சாட்டு

## பிரிட்டிஷ் தூதர் பொலிஸில் புகார்

(கொழும்பு)

சிறிலங்காவில் நேற்றுமுன்தினம் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தல முறைகேடுகளில் ஈடுபட்டதாக சிறிலஙகாவிற்கான பிரிட்டிஷ் தூதுவர் டேவிற் கிளாஸ்கொன் பொலிஸில் புகார் தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்திலுள்ள திக்வெல்ல பகுதியில் ஆளும் கட்சியான ஐ. தே. க.வின் தொண்டர்கள் கைவிரல்களில் பூசப்படும் தேர்தல் மையை அழித்துவிட்டு மீண்டும் மீண்டும் வாக்களிப்பில் ஈடுபட்டதாக பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாஸ்கொன் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

இதேவேளை பிரிட்டிஷ் தூதுவர் உள்நாட்டுத் தேர்தல் விவகாரத்தில் தலையிடுவதாக ஐ தே. க. செயலாளரும், வீடமைப்பு அமைச்சருமான சிறிசேனகுரே குற்றம் சாட்டியுளளார். இதுபற்றி கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவரகத்திலும் தேர்தல் ஆணையாளரிடமும், சர்வதேச கண்காணிப்டாளர் குழுவிடமும் ஐ. தே க. முறைப்பாடு செய்துள்ளது.

நாடாளுமன்றத்தில பேதைவஸ்து கடத்தல்காரர்களுக்கு உதவியாக இருக்கிறார் பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாஸ்கொன என எம். பி. றிச்சர்ட் பியசிறி பேசியிருந்தார். அதற்குப் பழிக்குப் பழி வாங்கும் முகமாகவே ரிச்சர்ட் பியசிறியின் தொகுதியில முறைகேடு நடந்ததாக பிரிட்டிஷ் தூதுவர் கிளாஸ்கொன் குறிப்பிடுவதாக ஐ தே. க. பிரிட்டிஷ் தூதுவர்மீது குற்றம் சாட்டியுள்ளது.

## வீரவணக்கம்

### பவான், ஆனந், சைமன்

(யாழ்ப்பாணம்)

அம்பாறை மாவட்டத்தில் தம்பிலுவில களப்புப்பகுதியில் நடந்த வெள்ளிக்கிழமையன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்றில் காயமடைந்த வீர வேங்கைகள் பவான் (தம்பிலுவில்), ஆனந் (தம்பிலுவில்) ஆகியோர் சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கனகராஜன் குளத்தில் நடந்த வாகன விபத்தில் சைமன் (க. சந்திரபாலன், தருமபுரம்) என்ற போராளி மரணமானார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## புலிகள் - இராணுவம் அம்பாறையில் மோதல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நடைபெற்ற மோதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டது. புலிகள் தரப்பில் இரு போராளிகள் காயமடைந்து பின் சயனைட் அருந்தி வீரமரணமடைந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் தம்பிலுவில் என்னுமிடத்திற்குச் சிறிலங்கா இராணுவத்தினர் சென்றுகொண்டிருக்கையில் தம்பிலுவில் களப்புப்பகுதியில் வைத்து இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் முறைகேடுகள் சுதந்திரக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

வாக்குப்பதிவின்போது திட்டமிட்ட முறைகேடுகள் நடந்திருப்பதாக சிறிலங்கா சு.கட்சி அரசைக் குற்றம் சாட்டியுள்ளது. சனியன்று நடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் பற்றி கருத்துத் தெரிவித்த போதே சிறிலங்கா. சு. கட்சி இவ்வாறு தெரிவித்துள்ளது.

குறிப்பாக தெகிவளை, மவுண்ட்லேவனியா பகுதிகளில் தேர்தல் முறைகேடுகள் நடந்திருப்பதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூறியுள்ளது.

## ஒரு மாநகரசபை மட்டுமே சுதந்திரக் கட்சியிடம்

(கொழும்பு)

உள்ளூராட்சித தேர்தல்கள் நடந்த பத்து மாநகர சபைகளிலே சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரத்தினபுரி மாநகர சபையை மாத்திரம் கைப்பற்ற முடிந்தது. இதேவேளை, சிறிஜெயவர்த்தனபுர, கோட்டே, பாணந்துறை நகர சபைகளுக்கான தேர்தலிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வெற்றியீட்டியது.

மாத்தறை நகரசபைத் தேர்தலில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது.

பேருவெல, ஜாஎல நகர சபைத் தேர்தல்களில் சுயேட்சைக் குழு (ஒன்று) வெற்றியீட்டியுள்ளது.

## “தமிழருக்கு எதிரான அநீதியே இளைஞரைப் போராட வைத்தது”

### - ஐ. நா. செயளாருக்குக் கடிதம்

பாராளுமன்றத்திலும், வெளியிலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஜனநாயக சமாதான அணுகு முறைகளினால் இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காண முடியவில்லை. சாத்வீகப் போராட்டங்களும் தோல்வியைத் தழுவின. சிங்களவரைப் பெரும் பான்மையாகக் கொண்ட சிறிலங்கா அரசுகளுக்கும் சிறுபான்மையினரான தமிழர்களின் தலைவர்களுக்கும் இடையிலான உடன்பாடுகளும் சிங்களத்தீவிர வாதிகள், மற்றும் அரசியற் சந்தர்ப்பவாதிகளின் நிர்ப்பந்தத்தால் கைவிடப்பட்டன. தமிழருக்கு எதிரான அநீதிகளையும், வெறுமையான எதிர்காலத்தையும் கண்ணுற்ற தமிழ் இளைஞர் போராட்டத்தில் இறங்கினார் 4 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்கப்படாத நிலையில் இளைஞனின் சடலம்

(வவுனியா)

வவுனியா மாணிக்க வளவு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைஞரின் சடலம் மீட்கப்படாத நிலையில் அழுகிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2ஆம் திகதி வவுனியா இராணுவ முகாம்களிலிருந்து காடுகள் வழியாக வவுனியா யாழ்: பிரதான வீதியில் உள்ள மாணிக்க வளவு பகுதிக்கு வந்த இராணுவத்தினர், வீதியில் நின்ற பொதுமக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் முத்தையா குமார் (24) என்ற இளைஞர் கொல்லப்பட்டார். இவர் மணிபுரம் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## 236 உள்ளூராட்சி சபைகளில் ஐ. தே. க. 190ஐ கைப்பற்றியது

(கொழும்பு)

சிறிலங்காவில் நேற்றுமுன்தினம்நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில ஐக்கிய தேசியக்கட்சி பெரும் வெற்றிபெற்றுள்ளது. வடக்கு - கிழக்கு நீங்கலாக ஏனைய 7 மாகாணங்களிலும் உள்ள 17 மாவட்டங்களில மொத்தம் 236 உள்ளூராட்சி சபைகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காகவே இத்தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய தேசியக்கட்சி 190 இடங்களையும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி 36 இடங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி 3 இடங்களையும், சுயேச்சை (I) 4 இடங்களையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 2 இடங்களையும், மக்கள் ஐக்கிய முன்னணி 1 இடங்களையும் பெற்றுக் கொண்டன.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் படி கட்சி நிலைபரங்களை பக்கம் நான்கில் பார்க்கவும்.

## ஜனநாயகம் வென்றதாம்

(கொழும்பு)

ஜனநாயகம் வெற்றிபெற்றிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் சனிக்கிழமையன்று (4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

இலவச
அக்குபங்சர் சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளரினால் சகல விசமான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது மேலதிக விபரங்கட்கு இல: 121/2 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். இல: 95 யாழ் வீதி, மானிப்பாய் திருமதி சத்தியமூர்த்தி, புகையிரதநிலைய வீதி கொக்குவில் (R 1383)

### வகுப்புக்கள்

Cake Icing Sugar Craft, General Cookery, Hair Dressing புதிய பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன உடனதொடர்பு கொள்ளவும்: Yogi Home Science Academy 71 B, Navanmar Road, Off Kachcheri Nallur Road, Nallur, Jaffna (R/1386)

### காணவில்லை

11-05-91 சனி கிழமை அன்று மாலை 320060206V என்னுமிலக்கமுடைய அடையாள அட்டை கே. கே. எஸ். வீதி தாமோதர விலாஸில் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறுகேட்டுக்கொள்ளுகின்றோம் (B-2502)

## பற்சிகிச்சை அறிவித்தல்

**D. சேனாதிராஜா M.H.D.I:, L.C.O.**

பல் கட்டுபவர், தராதரம்பெற்ற கண் பரிசோதகரும், கண்ணாடி கொடுப்பவரும்.

உங்கள் பற்களை உடனுக்குடன் கட்டிச்செல்ல உடன் விஜயம செய்யுங்கள்.

(ஒரே நாளில் கட்டித் தரபபடும்)

வாடிக்கையாளரின் நலன்கருதி எமது ஸ்தாபனம் கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இல: 146, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(அரசடிச சந்தி) (R.1381)


## நெஞ்சத்தின் நினைவுகளில் ஏழாண்டு

**பணக்காரன்**
(மிகேகல்பிள்ளை அமலதாஸ்)

ஆண்டவன் படைப்பு
26-08-1959

அன்னியர் அழிப்பு
13-05-1984

காலங்கள் சிறிது உண்டு
உம கனவின நனவிற்கு
காலங்கள் தோறும் உண்டு
உம நினைவு எம
நெஞ்சிற்கு
உம் மணநாளை காணாத
எம் நெஞ்சம
உம் பிணநாளில்
வெகிறது வேதனையால்
ஏழாண்டு ஆனாலும்
எம் நெஞ்சில்
ஏராளம் ஏராளம
உம நினைவு
இறைவனுடன்
இணைந்திருக்க
இறைஞ்சுகின்றோம்
இறைபலியில்

பிரிவால் வாடும்
தாய், சகோதரர்கள்,
மைத்துனர்மார்,
மருமக்கள், பெறாமகன்,
உறவினர், நண்பர்கள்.

89, புதிய கடற்கரைவீதி,
குருநகர்
யாழ்ப்பாணம்

(B-2500)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



மறைந்தும் மறையாத வீரவேங்கை

**லெப். நிதி**
(வி. நீதிவண்ணன், சித்தன்கேணி)

தாயின்மடியில் 12-10-72 தாயகமண்ணில் 01-04-91

நிதி சிரித்த உன்முகம்
காண எம் சிந்தை துடிக்க
சரித்திரத்து நாயகன் ஆகினாயோ
உன் மழலை முகம் காண துடிக்கும்

மாலாக்கா குடும்பத்தினரும்
நீராவியடி நண்பர்களும்

(R - 1385)

## 3 - ம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் கரேந்திரன்**
(செல்வவிநாயகம்-ஞானசேகரன்)

தாயவளின் மடியினுக்கு — 13-12-1967
தமிழீழ விடிவினுக்கு — 13-05-1988

தமிழ் ஈழம் மீட்கக் களம் சேர்ந்த
எம் முதற்குல தீபமே! கரேந்திரா!!
எம் இனத்தின் விடுதலைக்காய்
எதிரிகள் பலரின் உடல் கொண்டாய்:
அமைதி கொள்ள வந்த கொலைப்படையைக் கதிகலங்க
வைத்தாய்
தொடரும் உன் இலட்சியம் நிறைவுற
தொடர்வர் உம் நண்பர் உன் வழி
நிலையாக எம் நினைவில் நிலைத்தவனே
நினைக்கின்றோம் இந்நாளில் உப்பணி
வெல்க! வெல்க!!


ஞானசேகரன் வீதி,
நெடியகாடு.
வல்வெட்டித்துறை

அப்பா, அம்மா, தம்பி
தங்கை, உறவினர், நண்பர்கள்.


(B/1378)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 05 - 13**



**பணக்காரன்**
(மிகேல்பிள்ளை அமலதாஸ், - குருநகர், யாழ்ப்பாணம)



**கப்டன் கரேந்திரன்**
(செல்வவிநாயகம் ஞானசேகரன்-நெடியகாடு, வல்வெட்டித்துறை)



**முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன்**
(உடுவில்)

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்து கொண்டு செல்கையில் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த
பணக்காரன் (மிகேல்பிள்ளை அமலதாஸ் - 89, புதியகடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்

1988 ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பின்போது வீரமரணமடைந்த
கமல் (சின்னத்தம்பி ஆதிமலிங்கம் - அக்கரைப்பற்று)

இதே ஆண்டு வெற்றிலைக்கேணியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த
கப்டன் கரேந்திரன் (செல்வவிநாயகம் ஞானசேகரன் - ஞானசேகரன் வீதி, நெடியகாடு, வல்வெட்டித்துறை)

1989 ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட
★ முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன் (உடுவில்)

1990 ஆம் ஆண்டு மூளைக்காய்ச்சல் நோயினால் எமைப்பிரிந்த
உஷா (பாலச்சந்திரன் - நாரந்தனை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர் கோபாலகிருஷ்ணன் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/ 2501)

## சிந்தனைக்கு

பேனுக்கும் தெள்ளுக்கும், இடையே எது உயர்ந்தது என்ற பேச்சுக்கே இடமில்லை.

— யேம்ஸல் ஜான்சன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி யாழ்ப்பாணம். 13-05-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ எண்: 05


# சிறிலங்காவில் சிதைந்த எதிர்க்கட்சிகள்

சிறிலங்காவில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெரு வெற்றி ஈட்டியுள்ளது எதிர்பார்த்ததைவிட ஐ தே கட்சி கூடுதலான உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றியுள்ளது என்றே கூறலாம் எதிர்க்கட்சிகள் தேர்தல் முறைகேடுகள் பற்றிக் குரல் எழுப்பினாலும் அதனால் பயனேதும் ஏற்படப் போவதில்லை.

சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஐ தே க அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டுகளின் மத்தியிலும், விலைவாசி ஏற்றம் போன்ற அன்றாடப் பிரச்சினைகள் பெரியளவில் மக்களைப் பாதித்துள்ளபோதும் உள்ளூராட்சித் தேர்தலில் ஐ தே க. பெரு வெற்றி அடைந்துள்ளது.

ஐ.தே கட்சியின் இவ் வெற்றி இன்றைய அரசாங்கத்தின் செயற்திறனினால் மட்டும் பெறப்பட்டதல்ல சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் திட்டமிட்ட நடவடிக்கைகளாலும். இன்றைய எதிர்க்கட்சிகளின் திட்டமிடாத நடவடிக்கைகளினாலும் பெறப்பட்டதாகும்.

பாராளுமன்ற அரசியலில் பழுத்த அனுபவசாலியான ஜே ஆர். ஜெயவர்த்தனா சிறிலங்காவிற்கு அறிமுகமாக்கிய விகிதாசார பிரதிநிதித்துவம் ஐ தே கட்சியை என்றும் காப்பாற்றக்கூடியதானதொரு தேர்தல் முறையாகும்.

மேலும் ஜே, ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சிகள் யாவும் அவரின் திட்டமிட்ட நடவடிக்கையால் சீர்குலைக்கப்பட்டன. பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியே பல துண்டுகளாகப் பிளவுபடுத்தப்பட்டது.

அதேவேளை, ஜே. ஆர் ஜெயவர்த்தனா ஆட்சிக் காலம் முடிவுற்ற பின்னரும் அப்பூசல்களில் இருந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஏனைய கட்சிகளும் இன்று வரை விடுபடவில்லை. ஆனால் ஐ தே. கட்சியோ அரச இயந்திரத்தையே தனது சகல தேவைகளுக்குமாகப் பயன்படுத்தி வந்ததோடு பலமான நிலையில் இருந்துகொண்டு தேர்தல் நோக்கில் விட்டுக் கொடுப்புக்களுக்கும் தயாராக இருந்தது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் தேர்தல் உடன்பாடு செய்துகொண்ட ஐ. தே கட்சி சில நகர சபைகளிலும், பிரதேச சபைகளிலும் இ தொ. காங்கிரஸ் சின்னமான சேவலின் கீழும் போட்டியிடத் தயாராக இருந்தது.

ஆனால், உருக்குலைந்து, உள் முரண்பாடுகளுடன் காணப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ, ஏனைய எதிர்க்கட்சிகளோ பொது எதிரிக்கான உடன்பாட்டை எட்டுவதில் தமது வரட்டுக் கௌரவங்களை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை.

தேர்தலின்போது கொள்கையில் பொதுக் கருத்தை எட்ட முடிந்த எதிர்க்கட்சிகளிடம் எச்சின்னத்தில் போட்டியிடுதல் என்பதில உடன்பாடு எட்ட முடியவில்லை. இதனால் முரண்பாடுகள் உருவாகித் தனித் தனியாகப் போட்டியிடத் தீர்மானித்தமைதுரதிர்ஷ்டமானது என்பதோடு, எதிர்க்கட்சிகள் தமது நிலையை மதிப்பீடு செய்வதில் தவறியுள்ளன என்பதும் வெளிப்படை.

அதேவேளை, தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஓர் அணியில் நின்று போட்டியிட்டிருப்பினும் ஐ.தே கட்சியை முழுமையாகத் தோற்கடித்து இருக்கலாம் என்றும் சொல்வதற்கில்லை குறிப்பிடக்கூடிய சில நகர, பிரதேச சபைகளைக் கைப்பற்றி இருக்கலாம் என்பதே தேர்தலில் கிடைத்திருக்கும் வாக்குகளின் அளவுகள் வெளிப்படுத்தும் உண்மையாகும்

இந்நிலை இன்று மட்டுமல்ல, 1977 ஆம் ஆண்டில் இருந்து தொடர்கிறது. எதிர்காலத்திலும் தொடரப் போவது ஆகும். ஐ.தே கட்சி தனது வெற்றிக்காக அரச இயந்திரத்தையும், தேர்தல் நடைமுறைகளையும் எவ்வாறு பயன்படுத்துதல் என்பதைத் தெளிவாகக் கற்றுக்கொண்டு விட்டது

இந்நிலையில், ஐ தே. கட்சியை சிறிலங்காவில் இன்றைய தேர்தல்முறை மூலம் பதவியிழக்கச் செய்வதற்கு தற்போதைய எதிர்க்கட்சிகளினால் முடியாது. சிறிலங்காவில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டுமானால் பலமான எவ் விழப்புக்களையும் தாங்கக்கூடிய சக்தி புதியதாக உருவாக வேண்டும்.

(நேற்றைய தொடர்ச்சி)

# ஏப்ரல் மாதத்தில் தென்தமிழீழம்

| திகதி | இடம் | சம்பவம் | பாதிக்கப்பட்டவர் பெயர்கள் |
|---|---|---|---|
| 13-04-91 | ஆக்கரைப்பற்று. | சுற்றிவளைத்து தேடுதலின் போது சுட்டுக் கொன்றது இராணுவம். | கண்ணன் |
| 16-04-91 | குறிஞ்சாமுனை | இராணுவத்தால் சுடடுக்கொலை. | வேலப்போடி மயில்வாகனம் (மன நோயாளியானவர்) |
| 17-04-91 | பழுகாமம் | கழுத்தில் வெட்டிக்கொலை. | செல்வநாயகம் இராஜேந்திரம் (வயது 20, திருமணமானவர்) |
| 18-04-91 | 13ஆம் கிராமம், மண்டூர் | இராணுவத்தினரதும், ரெலோவினரதும் சித்திரவதைக்கு தப்ப கிணற்றினுள் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார். | முருகேசு கோபால் |
| 21-04-91 | களுவாஞ்சிக்குடி | இராணுவமும், ரெலோவினரும் சேர்ந்து கைது. | நவநாதபிள்ளை கணேசமூர்த்தி (வயது 27) |
| 22 04-91 | — | இராணுவத்தினரால் கைது. | தாசன் (கறுவாக்கேணி) துரைராசா (வாழைச்சேனை) குணம் (கிரான்) சண்முகநாதன் |
| 23-04-91 | வந்தாறுமூலை | இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர். | செல்லையா தங்கராசா (வயது 40, ஐந்து பிள்ளைகளின் தந்தை) |
| 23-04 91 | கொடுவாமடு | இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார். | பாலிப்போடி வசந்தராசா (ஏழு பிள்ளைகளின் தந்தை) |
| 23-04-91 | செங்கலடி | முகாமிற்கு கடத்திச் செல்லப்பட்ட ஒருவர் ரயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளார். | |
| 24-04-91 | கல்லடி | சிறிலங்கா இரகசியப் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டார். | 12 வயதுச் சிறுமி வடை விற்பவர் |
| 24-04-91 | இலுப்படிச் சேனை | இராணுவத்தினராலும், ரெலோவினராலும் சுட்டுக்கொலை. | சீனித்தம்பி பத்மநாதன் (வயது 40 இலுப்படிச்சேனை மூன்று பிள்ளைகளின் தந்தை) |
| 24-04-91 | திண்ணையடி | இராணுவத்தினரும், ரெலோவினரும் சேர்ந்துசுற்றிவளைத்தனர் 70 பேர்முகாமுக்குகொண்டு செல்லப்பட்டனர், 6பேர் தடுத்து வைப்பு. | |
| 24-04-91 | கோரக்கல்லிமடு | கிராமத்தைச் சுற்றிவளைத்த இராணுவத்தால் 15 பொது மக்கள் கைது, முகாமில் பயங்கரமாக தாக்கபபட்டுள்ளனர். | |
| 25-04-91 | ஊறணிச்சந்தி | தலை இல்லாத இரண்டு சடலங்கள் வீதியில் கிடந்தன. | சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை. |
| 25 04-91 | சித்தாண்டி | சிறிலங்கா இராணுவத்துடன் வந்த ரெலோவினரால் கைது. | நடராசா யோகராசா (வயது 32, படிப்பித்துக் கொண்டிருக்கையில் கைதாகினார்.) |
| 25 04-91 | மட்டக்களப்பு | இராணுவத்தினராலும் ரெலோவினராலும் கைது. | தெய்வநாயகம், அழகசுந்தரம் (தபால் ஊழியர்) (இலுப்படிச்சேனை) |
| 26-04-91 | நீலாவணை | கிராமத்தைச் சுற்றிவளைத்த இராணுவம் 12 பொதுமக்களைக் கைது செய்தது. | |
| 26-04-91 | யானை கட்டிய வெளி, காக்காச்சிவெட்டை | கிராமத்தைச் சுற்றி வளைத்து தேடுதலில் கைதானநான்குபேரில் இருவர் கழுத்து வெட்டப்பட்டு கொலை இருவர்நிலைதெரியாது. | |
| 27-04-91 | செல்வநகர் மட்டக்களப்பு | கழுத்தில் வெட்டப்பட்ட சடலம் வீதியில் காணப்பட்டது. | சிவஞானம் சற்குணானந்தம் வயது 38 திருமணமானவர் அரச ஊழியர் |
| 28 04-91 | மட்டக்களப்பு | இராணுவத்தினராலும், ரெலோவினராலும் கைது. | திருமால் (வயது 25) புல்லுமலை. |

## கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம் நடத்தும் ஆண் பெண் கூடைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை யாழ் பல்கலைக்கழக உடற்கல்விக் காரியாலயத்தில் (மருத்துவ பீட பின்புறமாக) பெற்றுக்கொள்ளவும் எனவும் சகல போட்டிகளும் பல்கலைக்கழக மைதானத்திலேயே நடைபெறும் எனவும் விண்ணப்ப முடிவுத்திகதி 20-5-91 எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது

## பாரதிபுரம் பாடசாலையை அரசு பொறுப்பேற்றது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள பாரதிபுரம் பாடசாலையை இம்மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அரசு பொறுப்பேற்றுள்ளது.

சுமார் 10ஆயிரம் மலையக மக்கள் வாழும் இக்கிராமத்தில் அவர்களின் பிள்ளைகள் கல்வி கற்க ஒரு அரசாங்க பாடசாலை இல்லாத நிலையே இது வரை நிலவியது.

சுமார் 400 பிள்ளைகள் கல்வி கற்றுவரும் இப்பாடசாலையின் அதிபராக கனகாம்பிகைகுளம் உப அதிபர் திரு. கனகரெத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். உதவி ஆசிரியர்களாக 3பெண்களும், தொண்டர் ஆசிரியர்கள் 3பேரும் இப்பாடசாலையில் கல்விகற்பிக்கிறார்கள்.

இப்பாடசாலையை நடாத்துவதற்காக ஒருகட்டடத்தை சர்வோதய இயக்கமும், மற்றொரு கட்டடத்தை அக்கிராம மக்களும் கட்டிக்கொடுத்துள்ளனர். (49)

# தென்ஆபிரிக்கா வெள்ளையர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

(கேப்டவுண்)

தென்னாபிரிக்காவில் இன வெறிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக அந்நாட்டரசு எடுத்த முடிவுக்கு வலதுசாரி வெள்ளை இனத்தவர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். இதனால் பல இடங்களில் பொலிஸாருடன் மோதல் ஏற்பட்டுள்ளது. வென்டர்ஸ்ரான் என்ற இடத்தில் வசிக்கும் வெள்ளையரல்லாதோரை வெளியேற்ற வலதுசாரிகள் முயன்றபோது பொலிஸார் அவர்களைத் தடுத்தனர். வென்டர்ஸ்ரான் பகுதியில் ஆயுதங்களுடன் புகுந்த வலதுசாரி வெள்ளையர் அங்கு வசிக்கும் கறுப்பு இனத்தவர் மீது கடும் தாக்குதலை நடத்தி வெளியேற்ற முயற்சித்தனர். பலருக்குக் கத்திக்குத்து விழுந்தது.

இத்தாக்குதலை இன்காபா இயக்கத்தினரே கறுப்பினத்தவர்மீது நடத்தினர். இத்தாக்குதலின் போது 22 கறுப்பினத்தவர் கொல்லப்பட்டனர்.

தென்ஆபிரிக்காவில் இன ஒடுக்கல்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க அந்நாட்டதிபர் டி. கிளார்க் எடுத்து வரும் முயற்சிகளை எதிர்த்து வெள்ளை இன விவசாயிகள் மேலும் பல இடங்களில் கலவரங்களில் ஈடுபட்டுள்ளனர். கறுப்பு இன மக்கள் மீது அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். முதன்முறையாக வெள்ளையர்மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

# தமிழகத்தில்74 தொகுதிக்கு பாதுகாப்பு படைகள்

(பெங்களூர்)

தமிழகத்தில் மூன்று லோக்சபாத் தொகுதிகளும், 74 சட்டப் பேரவைத் தொகுதிகளும் பதற்றம் நிகழக்கூடிய தொகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன என்று இந்திய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ரி. என. சேஷன் தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் தமிழகத்தில் மேலும் 15 மக்கள் அவைத் தொகுதிகள் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் தொகுதிகளாக மத்திய உள்துறை அமைச்சினால் கண்டறியப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்தத் தொகுதிகளில் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளை கவனிக்க மத்திய பாதுகாப்புப் படையின் முப்பது அணிகள் நாளை தமிழகத்திற்கு வருகின்றது என்றும் ரி. என்.சேஷன் தெரிவித்தார்.

இந்தியாவின் எந்த ஒரு பகுதியிலும் தேர்தல்களை ஒத்திப்போடும் உத்தேசம் தற்சமயம் இல்லை எனத் தெரிவித்தசேஷன் நிலைமைக்கேற்ப நடவடிக்கைகளை எடுக்க தேர்தல் ஆணைக்குழு தயாராக இருக்கிறது என்றும் கூறினார்.

# கைப்பற்றிய பிரதேசங்களை மீள ஒப்படைக்க முடியாது

## -இஸ்ரேல் அறிவிப்பு

(டெல் அவிவ்)

இஸ்ரேல் தான் கைப்பற்றிய அரபு பிரதேசங்கள் எதனையும் திருப்பி ஒப்படைக்கப் போவதில்லையென தெரிவித்தள்ளது. பிராந்தியத்தில் நீடித்தசமாதானம் நிலவுவதற்காக இஸ்ரேல் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று அமெரிக்காவும், சோவியத் யூனியனும் விடுத்த கோரிக்கையை இஸ்ரேல் நிராகரித்து விட்டது.

# நீரில் மூழ்கி இளைஞன் மரணம்

(செ. த. மை)

குளத்தில் குளிக்கச் சென்றவர், நீருள் மூழ்கி மரணமானார். கட்டுவனைச் சேர்ந்த சிவலிங்கம் அருளானந்தம் (30 வயது) என்பவரே மரணமானவராவார். சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து மல்லாகத்தில் வசித்து வந்த இவர், பெயின்ரிங் வேலை நிமித்தம் கரவெட்டிக்கு சென்றிருந்தார். கடந்த 10ஆம் திகதி அங்குள்ள குளமொன்றில் குளித்துக் கொண்டிருந்த பொழுது மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

# கொழும்பு செல்லவுள்ள நோயாளர் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

மருத்துவ சிகிச்சைக்காக கொழும்பு செல்லவுள்ள நோயாளர்களின் தகுதிகளைப் பரிசோதிக்கும் வேலை தற்பொழுது நடைபெற்று வருகிறது.

இதேவேளை கடைசியாக கப்பலில் கொண்டு செல்லப்பட்ட நோயாளர்களில் ஒருவரான திருமதி சதாசிவம் என்பவர் மாரகம வைத்திய சாலையில் மரணமாகி உள்ளார். இவர் ஒரு புற்றுநோய்க்குள்ளான நோயாளிஎன்பது குறிப்பிடத்தக்கது. (லோ)

## கலந்துரையாடல்

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் துணைப் படையில் பயிற்சி பெற்றவர்களும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி புரிந்தோரும் கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஆண்கள் மட்டும் இக் கலந்துரையாடலில் பங்குகொள்ள அழைக்கப்படுகின்றனர். யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் 15 ஆம் திகதி புதன்கிழமை மாலை நான்கு மணிக்கு இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

## மடு அகதிமுகாமில்

மக்கள் தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம் பெயர்ந்து சென்று மடு அகதி முகாமில் தஞ்சமடைந்தனர். இவர்களில் ஐயாயிரம் பேர் மீளச்சென்று தமது வீடுகளில் குடியமர்ந்துள்ளனர் என்று மடு திருப்பதி அகதி முகாமின் நிர்வாக வட்டாரங்கள் ஈழநாதத்திற்குத் தெரிவித்தன.

மடு அகதி முகாமில் நிலவும் சுகாதார சீர்கேட்டினாலும், மருத்துவ வசதியீனம், தண்ணீர்ப் பற்றாக்குறை போன்ற காரணங்களினால் மேற்படி அகதிகள் விலகிச் சென்றுள்ளனர் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதே சமயம், வவுனியாவில் தற்போது இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி, இடம் பெயர்ந்து செல்லும் மக்களில் அதிகமானோர் தமது உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.

### வாகனேரிக்குளத்தில் நீர் திறக்க

# இராணுவம் தடை விவசாயிகள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகனேரிப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் இப்பகுதியில் அகதிகளாக வாழும் தமிழர்களின் விவசாயமும் மீன்பிடித்தொழிலும் பெரிதும் பாதிப்புற்றுள்ளது.

வாகனேரியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் வாகனேரிக்குளத்தில் இருந்து விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் திறந்து விடத்தடை விதித்ததோடு தண்ணீர் திறந்துவிடும் திறப்புக்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இதனால் காலபோகவேளாண்மைக்கு தயார் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலமும். நெல்லும் அழிந்துபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் வாகனேரிக்குளத்தில் மீன்பிடித்துவந்த இந்த அகதிகளை அங்கு மீன்பிடிக்க வேண்டாமென இராணுவம் தடைவிதித்துள்ளதால் இப்பகுதியில் இருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட மீனவக்குடும்பத்தினர் இடம்பெயர்ந்துள்ளனர்.

## புலிகள் – இராணுவம்

குதல் நடாத்தினார்கள்.

இத் தாக்குதல் முப்பது நிமிட நேரம் வரையில் நீடித்தது இச் சம்பவத்தின் போது சிறிலங்கா இராணுவத்தரப்பில் ஏற்பட்ட சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை.

## ஜனநாயகம்

நடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் பற்றி கருத்து வெளியிட்ட சிறிலங்கா ஜனாதிபதி ஜனநாயகம் வெற்றி பெற்றுள்ளதென மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### மேதினப் போட்டியில்

# வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன

மேதினத்தை ஒட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில் வழங்கும் வைபவம் நேற்று கோண்டாவிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலக மாவீரர் கலையரங்கத்தில் இடம் பெற்றது

இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

மேலும் இந் பரிசளிப்பு நிகழ்ச்சியில் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் திரு. திலக், திரு. அரவிந்தன், செல்வி ஆர்த்தி, திரு. டொமினிக், திரு. மூர்த்தி, திரு. ரவி, திரு. ராஜன், திரு. காஸ்ரோ ஆகியோருடன் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் பேபி. சுப்பிரமணியம் அவர்களும் கலந்து கொண்டு முதலிடம் பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கங்களை வழங்கினார். ஏனைய பரிசில்கள் பெற்றோருக்கு அவர்கள்பங்குபற்றிய போட்டிகளுக்கு ஏற்ற வகையில் உபகரணங்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன. (லோ)

# நான்கு நக்சலைட்டுகள் ஆந்திர அரசால் விடுதலை

(டில்லி)

ஆந்திரப் பிரதேசத்தில் பிரமனப்பள்ளிக் கிராமத்தில் நான்கு நக்சலைட்டுகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்திராகாங்கிரஸ் எம். எல். ஏயைக் கடத்திச் சென்ற நக்சலைட்டுகளின் கோரிக்கைக்கு இணங்கவே அவர்களது நான்கு பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். விசாகப்பட்டணத்திலிருந்து ஹைதராபாத்துக்கு இவர்கள் விமானத்தில் அழைத்துச்செல்லப்பட்டனர்.

கடத்திச்செல்லப்பட்ட முன்னாள் அமைச்சரான சிவ்சங்கரின் மகனான சுபோத் குமாரையும், துணைமாவட்ட ஆட்சித்தலைவர் கிரிதரையும் விடுவிக்க முயற்சிகள் தொடர்கின்றன.

# முன்னாள் பிரதமர் மூவர் உத்தரப் பிர. போட்டி

(டில்லி)

உத்தரப்பிரதேசத்தில் லோக்சபா மற்றும் சட்டப் பேரவைத் தேர்தல்களின் சிறப்பு அம்சம் பிரதம மந்திரி சந்திரசேகர், முன்னாள் பிரதம மந்திரிகள் ராஜீவ் காந்தி, வி. பி. சிங் ஆகியோர் தேர்தல் களத்தில் நிற்கிறார்கள் மற்றும் முன்னாள் ஒன்பது அமைச்சர்களும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உத்தரப்பிரதேச மாவட்டத்தில் தான் லோக்சபை மற்றும் சட்டப்பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கை மற்ற மாநிலங்களைவிட அதிகளவில் உள்ளன.

# இஸ்ரேலுடன் பேச்சு நடத்த சவூதிஅரேபியா சம்மதம்

சவூதி அரேபியா மற்றும் வளைகுடா ஒத்துழைப்பு சபையின் ஐந்து நாடுகளும் மேற்காசியாவின் அமைதி மாநாட்டில் கலந்து கொள்ள முதல் முறையாக இணக்கம் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் றியாட்டில் இதனைத் தெரிவித்த சவூதி அரேபியாவின் வெளியுறவுத்துறை அமைச்சின் அதிகாரி சவூதி அரேபியா வளைகுடா ஒத்துழைப்பு சபையின் நாடுகளான குவைத், பஃறின் ஓமான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கடடார் ஆகியவற்றுடன் சேர்ந்து இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கும் அதன் அயல் அரபு நாடுகளுக்கும் இடையே 43 ஆண்டு காலமாக தீராமல் இருந்துவரும் பிரச்சினைகள் இப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்கப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

## தமிழருக்கு

கள் இதன் விளைவாக நாம் மூன்று போர்களின் ஊடாக வாழுகிறோம். அதில் ஒன்று இந்திய அமைதிப்படைக்கு எதிரான யுத்தம்.

இவ்வாறு யாழ். மறை மாவட்டப் பொது நிலையினர் சபை ஐக்கிய நாடுகள் சபை கௌரவ செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள ஐ. நா. உயர்ஸ்தானிகர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள இக் கடிதத்தின் பிரதிகள் சர்வதேச நிறுவனங்களுக்கும். வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பக்கம் சாராத ஒருவரின் மத்தியஸ்தம் இன்றி பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சாத்தியமானதன்று ஆகவே ஐ நா. அல்லது பக்கம் சாராத சர்வதேச அமைப்பு ஒன்று பேச்சு வார்த்தைகளில் உதவ முன்வரவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மேலதிக நிதி தேவை

தென் ஆபிரிக்காவில் இனவாதத்தை எதிர்த்துப் போரிடுவதற்கு மேலும் அதிகளவு நிதியை தந்துதவுமாறு ஆபிரிக்க நிதியம் கோரிக்கைவிடுத்துள்ளது.

## உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின்படி கட்சிகளின் நிலைபரம்

| | மொத்தம் | ஐ.தே.க | சு.க | ஈ.பி | மு.கா | சுயே-I | சுயே-II | இ.தொ.கா | த.ஐ.வி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாநகரசபை | 10 | 9 | 1 | — | — | — | — | — | — |
| நகரசபை | 32 | 27 | 2 | 1 | — | 2 | — | — | — |
| பிரதேசசபை | 194 | 153 | 33 | 2 | — | 2 | — | 2 | 2 |
| | | 190 | 36 | 3 | | 4 | | 2 | 2 |

கடுகண்ணாவையில் போட்டியின்றி ஐ. தே. க. தெரிவு